<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 310/2019 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திரு.மரிய ஆரோக்கிய பிராங்கிளின் | | | |
| **Date** | **:** | **23.02.2026** | | | |
| **Time** | **:** | **11.25 a.m to 12.03 p.m** | | | |

<u>தொ.த.சா.**1.**திரு.மரிய ஆரோக்கிய பிராங்கிளின் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

நான் மனுதாரர் தொழிற்சங்கத்தின் உறுப்பினர் என காட்ட அடையாள அட்டை மற்றும் சந்தா ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் என்னுடைய சாட்சியத்தில் நிர்வாகம் சங்கம் அமைத்து செயல்படுவதை தடை செய்வதாக சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். மனுதாரர் தொழிற்சங்கம் தற்சமயம் வரை எதிர்மனுதாரர் நிறுவனத்தில் செயல்பட்டு வருகிறது என்றால் ஆமாம். தற்போது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 287 நிரந்தர தொழிலாளர்கள் உள்ளார்கள். 287 தொழிலாளர்களில் 220 தொழிலாளர்கள் எங்கள் சங்க உறுப்பினர்கள் ஆவார்கள். சங்க உறுப்பினர்களின் பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ஒவ்வொரு ஆண்டும் சங்க செயற்குழு, பொதுக்குழு கூட்டப்படும் என்றால்

ஆமாம். செயற்குழு பொதுக்குழு நடவடிக்கைக்காண ஆதாரம் தொழிலாளர் ஆணையம் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. இந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். பொதுவாக எங்கள் தொழிற்சங்க உறுப்பினர்கள் மீது நிர்வாகம் நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டும் என்றால் அதற்கு முன்னர் அழைத்து பேசுவார்கள் என்றால் ஆமாம். எங்கள் தொழிற்சங்கமானது சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு சாதகமாக தான் நிர்வாகத்திடம் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றால் இல்லை. சங்கத்தில் உறுப்பினர்கள் இல்லாதவர்கள் சார்பாக பேச்சு வார்த்தை நடத்தமாட்டார்கள். D.சிவா என்பவர் எங்கள் தொழிற்சங்கத்தின் உறுப்பினர் என்றால் ஆமாம். D.சிவா அவர் செய்த ஒழுங்கீன செய்கை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்ட விபரம் தெரியாது. சிவா மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க தொழிற்சங்கம் கேட்டுக் கொண்டது என்றால் தெரியாது. D.சிவா தற்சமயம் பணியில் இல்லை என்றால் ஆமாம். டேனியல் மோசஸ் என்பவரை தெரியும். அவர் எங்கள் தொழிற்சங்கத்தின் உறுப்பினர் இல்லை என்றால் ஆமாம். அவர் செய்த ஒழுங்கீன செய்கை காரணமாக நிர்வாகம் அவர் மீது நடவடிக்கை எடுத்த விபரம் தெரியாது. தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நிர்வாகத்திடம் பொது கோரிக்கை சம்பந்தமாக மனு அளிக்கப்பட்டதாக சொல்லும் பொழுது

என்ன பொது கோரிக்கை, எந்த தேதியில் அந்த மனு அளிக்கப்பட்டது என்ற விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை அதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. நிர்வாகம் அனைத்து தொழிலாளர்களையும் சமமாக நடத்தி வந்தன அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் சட்டப்படியாக வழங்கப்பட்டு வந்தனர் என்றால் தவறு. நான் வாங்கிய கடைசி மாத சம்பளம் ரூ.12,800/-. மேற்படி சம்பளத் தொகையானது குறைந்தபட்ச சட்ட ஊதியத்தில் சொல்லப்பட்டுள்ள தொகையை காட்டிலும் கூடுதலானது என்றால் மறுக்கிறேன். சம்பள உயர்வு கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் கோரிக்கை மட்டும் வைக்கப்பட்டது. சம்பள உயர்வு கேட்டு எந்த தேதியில் கோரிக்கை வைக்கப்பட்டது என்பதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. குறைந்தபட்ச ஊதிய சட்டம் முன்னிலைக்கு ஊதியம் வழங்க வேண்டும் என கேட்டு தொழிலாளர் ஆணையர் முன்பு மனு எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 17.09.2013 அன்று எனக்கு நிர்வாகத்தால் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அதற்கு நான் உரிய விளக்கம் அளித்தேன் என்றால் ஆமாம். என்னுடைய விளக்கம் திருப்திகரமாக இல்லை என்ற காரணத்தினால் உள்துறை விசாரணை நடத்தப்பட்டது என்றால் ஆமாம். நான் உள்துறை விசாரணை நடவடிக்கையில் கலந்து கொண்டு விளக்கம் அளித்தேன் என்றால்

ஆமாம். இரு தரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவணசாட்சியம் அளிக்க வாய்ப்பு கொடுத்து அது பதிவு செய்யப்பட்ட பின்னர் தான் விசாரணை அதிகாரி விசாரணை அறிக்கை வழங்கினார் என்றால் ஆமாம். ஆனால் அவர் என் தரப்பு சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பிரமாண வாக்குமூலம் பத்தி 14, 15 உள்ள சங்கதிகள் நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக உள்ளது என்றால் மறுக்கிறேன். ID.18/2014 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக நிர்வாகம் பேராணை மனு எண்.22751/2024 தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம். அந்த மனுவில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வருகிறேன் என்றால் ஆமாம். நான் என்னுடைய சாட்சியத்தில் நிர்வாகம் வேலை நீக்கம் சம்பந்தமாக உரிய அனுமதி வாங்கவில்லை என சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். ஆனால் அனுமதி மனு தாக்கல் செய்தது என்றால் தெரியும். அனுமதி மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அப்ரூவல் மனு சென்னை தொழிலாளர் தீர்ப்பாயத்தில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தான் நாங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோம் என்றால் ஆமாம். வேலை நிறுத்த போராட்டம் என்ன கோரிக்கை அடிப்படையில் நடத்தப்பட்டது என்ற விவரம் தெரியும். சம்பள உயர்வு கேட்டு நடத்தப்பட்டது. நான் உள்பட ஐந்து தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாகவும் வேலை நிறுத்த போராட்டம்

நடைபெற்றது என்றால் ஆமாம். கோரிக்கைகளில் அதுவும் ஒன்றாக இருந்தது. வேலை நிறுத்த போராட்டம் சங்கம் சார்பாக எந்த வித முன் அறிவிப்பும் இன்றி நடத்தப்பட்டது என்றால் மறுக்கிறேன். எந்த தேதியில் முன் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் தெரியவில்லை. அந்த முன் அறிவிப்பு நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வேலை செய்து வந்த காலகட்டத்தில் எனக்கும் நிர்வாகத்திற்கும் இடையே சுமூக உறவு இருந்து வந்தது என்றால் இல்லை. எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் எந்தவித தொய்வும் இன்றி உற்பத்தி நடைபெற்று வந்தது என்றால் மறுக்கிறேன். நான் வேலை செய்து வந்த காலகட்டத்தில் எனக்கும் நிர்வாகத்திற்கும் இடையே சுமூக உறவு இருந்தது என்றால் மறுக்கிறேன். 01.04.2011 முதல் 31.03.2014 வரைக்கான காலகட்டத்திற்கு நீண்ட கால ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தத்தில் எங்கள் தொழிற்சங்கம் கலந்து கொண்டு கையெழுத்து போட்டது என்றால் ஆமாம். 2015 ஆண்டிற்கு பின்னர் எத்தனை தொழிலாளர்கள் ஒழுங்கீன செய்கையின் காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டார்கள் என்ற விவரம் தெரியாது. நிர்வாகம் ஒழுங்கீன செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு எதிராக எந்தவித பாகுபாடும் இன்றி தான் நடவடிக்கையில் ஈடுபடும் என்றால் ஆமாம். நான் Passport வைத்திருக்கவில்லை. நான் பணி நீக்கம் செய்யப்பட்ட பின்னர்

Passport வைத்திருந்த காரணத்தினால் தான் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தேன் என்றால் மறுக்கிறேன். என் தந்தைக்கு விபத்து ஏற்பட்டதாக சொல்லி இருக்கும் பொழுது அது சம்பந்தப்பட்ட ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் வேலையில் சேர்ந்த நாள் முதல் பணி நீக்கம் செய்யப்பட்ட நாள் வரை மூன்று ஷிப்டுகளிலும் மாறி மாறி வேலை பார்த்து வந்தேன் என்றால் ஆமாம். மூன்று ஷிப்டுகளிலும் மாறி மாறி வேலை பார்த்து வந்திருக்கும் பொழுது போதிய ஓய்வு வழங்கப்படவில்லை என நான் தவறாக சொல்கிறேன் என்றால் மறுக்கிறேன். வேலை சமயத்தில் வாந்தி வந்ததாக சொல்லும் போது அதுக்காக நிர்வாகம் நடத்தி வந்த Dispensary அறையில் சிகிச்சை பெறவில்லை என்றால் ஆமாம். பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் நான் சொல்லி உள்ள முகவரி என்னுடைய சொந்த வீடு இல்லை. எனக்கு திருமணம் ஆகவில்லை. நான் பணி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் வேறு ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வருமானம் ஈட்டி போதிய வசதியுடன் வாழ்ந்து வருகிறேன் என்றால் மறுக்கிறேன். நான் செய்த ஒழுங்கீன செய்கை காரணமாக உரிய விசாரணை நடத்தி தான் நிர்வாகம் என்னை பணி நீக்கம் செய்து உள்ளது என்றாலும் எனவே நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் கேண்டீன் வசதி உள்ளது. எந்தவித பாகுபாடும் இன்றி

எதிர்மனுதாரர் நிர்வாகம் அனைத்து தொழிலாளர்களுக்கும் சலுகைகளை வழங்கி வருகிறது என்றால் மறுக்கிறேன்.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:23.02.2026